DEPOSITION OF WITNESS

IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,
TENKASI.

**MCOP.No. 178/2021**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.முருகன் **Pw 2** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 14th day of August 2024.

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த மனுவில் மனுதாரர் தரப்பு 2 வது சாட்சி ஆவேன். நான் எனது நிரூபண வாக்குமூலத்தை இன்று தாக்கல் செய்கிறேன். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். நான் அதை படித்து பார்த்துதான் கையொப்பம் இட்டுள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொன்னவை தான். நான் எனது தரப்பில் 1 ஆவணத்தை தாக்கல் செய்கிறேன். அது **எனது ஆதார் அட்டையின் நகல் ம.சா.ஆ. 11** ஆகும். மனுப்படி உத்தரவாக கேட்டுக்கொள்கிறேன்.

**3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

விபத்தில் இறந்து போன சண்முகையாவை எனக்கு எப்படி தெரியும் என்றால் அவர் எங்கள் ஊர்க்காரர். விபத்து சமயத்தில் நான் என்ன வேலையாக சம்பவ இடத்திற்கு சென்றேன் என்பதற்குண்டான ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ம.சா.ஆ.5 பார்வை மகசரில் இறந்துபோன நபர் தலைக்கவசம் அணிந்துவந்ததாக காட்டப்படவில்லை என்றால் அதுபற்றி எனக்கு

தெரியாது. வேன் இடித்த சத்தம் கேட்டு தான் நான் விபத்தை பார்த்தேன் என்றால் விபத்தை நான் நேரடியாக பார்த்தேன். தலைக்கவசம் அணியாமல் இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்ற சண்முகையா தான் விபத்திற்கு முழு காரணம் என்று சொன்னால் சரியல்ல. நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றும் நான்சம்பவ இடத்திலேயே கிடையாது என்றும் சொன்னால் சரியல்ல. இறந்த நபர் எனது ஊர்க்காரர் என்பதால் அவருக்கு இழப்பீடு கிடைக்கவேண்டும் என்பதற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**(Cross examination by R3 adopted by R1, R2)**

**மறுவிசாரணை இல்லை.**

**ஒம்/-S.மனோஜ்குமார்**
**கூடுதல் மாவட்ட நீதிபதி**
**தென்காசி**